# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

<u>ஆணை எண். 197/ந/2025, நாள். 06.11.2025</u>

திரு. S. அன்பழகன்,
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 22.05.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.05.2025 அன்று பெறப்பட்டு, 197/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 22.05.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

"திருச்சி மாவட்டம் துறையூரில் 286, பெரிய கடைவீதியில் செயல்பட்டு வரும் ஸ்ரீ வாசவி மஹால் திருமண மண்டபம் அரசு வகுத்துள்ள விதிமுறைகளில் ஒன்றை கூட அதுவும் ஒருவழிப் பாதையில் பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம்விடாமல் விதிமீறி பல வருடங்களாக செயல்பட்டு வருவது எனக்கு வியப்பாக உள்ளது என்பதை சுட்டி காட்டியும், திருமண மண்டபங்கள் எவ்வாறு இயங்க வேண்டும் என்று அரசு வகுத்துள்ள விதிமுறைகளின்படி திருமண மண்டபத்தின் மெயின் வாசல் 6 மீட்டர் இருக்க வேண்டும் என்றும், அதுபோக முகப்பு வாசல் 1 சைடு வாசல் 2 என்று மொத்தம் 3 வாசல் கட்டாயம் இருக்க வேண்டும் என்றும், திருமண மண்டபத்தை சுற்றி 6 மீட்டர் அகலத்திற்கு காலி இடம் விட்டிருக்கவேண்டும் என்றும், திருமணமண்டபத்தின் முன்புறம் குறைந்த பட்சம் 700 சதுர அடி பார்க்கிங் வசதி செய்து இருக்க வேண்டும் என்றும், திருமண மண்டபத்தின் இரண்டு பக்கத்திலும் எதிர்பாராமல் ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால் அதை அணைக்கும் பொருட்டு திருமண மண்டபத்தின்

இரண்டு பக்கத்திலும் 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட தண்ணீர் தொட்டி கட்டி இருக்க வேண்டும் என்றும் அந்த தொட்டியில் எந்த நேரமும் தண்ணீர் கண்டிப்பாக இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும் என்று அரசு வகுத்துள்ள விதிமுறைகளில் ஒன்றை கூட கடைப்பிடிக்காமல் விதிமீறி செயல்படும் ஸ்ரீ வாசவி மஹால் திருமண மண்டபத்தை மாண்புமிகு உயர்நீதிமன்ற வழிகாட்டுதலை பின்பற்றி இடித்து அகற்றுமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு 18.03.2025 இல் புகார் அனுப்பி அதனை அவர் 19.03.2025 இல் பெற்று கொண்டதாக எனக்கு ஒப்புதல் சான்று வந்துள்ளது.

என் புகாரின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடித எண்.1147/MA-1/2025-1 நாள் 26.03.2025 தேதியிட்ட கடிதம் மூலம் அரசு இணைச் செயலாளர் அவர்கள் நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு உத்தரவு பிறப்பித்து அதன் நகலை துறையூர் நகராட்சி ஆணையருக்கும் அனுப்பினார்.

மேலும் நான் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரில் ஏற்கனவே அவருக்கு எதிராக மாண்புமிகு உள்ளாட்சி முறை நடுவரிடம் 5 வழக்குகள் தாக்கல் செய்துள்ள விவரத்தையும் குறிப்பிட்டிருந்தேன். மேலும் விதிமுறைகளை மீறி செயல்படும் கட்டிடங்களை அதிகாரிகள் கண்காணித்து இடிப்பதுதான் சட்டம் என்றும், விதிமீறிய கட்டிடங்களை இடிப்பது அதிகாரிகள் கடமை என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் விதிமீறிய கட்டிடங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் கிளிபிள்ளைக்கு சொல்வது போல் கூறியதோடு தெள்ள தெளிவாக உத்தரவும் பிறப்பித்துள்ளது. விதிமீறிய கட்டிடங்கள் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்த அனைத்து அதிகாரிகள் மீதும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளதையும் ஆணையருக்கு சுட்டி காட்டி இருந்தேன்.

இத்தகைய சூழ்நிலைக்கு பின்பும் அதுவும் அரசு இணைச் செயலாளர் உத்தரவு பிறப்பித்ததை கூட கவனத்தில் கொள்ளாமல் அரசு விதிகளின்படி திருமணமண்டபத்தில் 3 வாசல் வைப்பதற்கு பதில் 1 வாசல் வைத்து, பார்க்கிங் கென்று 1 அங்குலம்கூட இடம் விடாமல் மண்டபத்தை சுற்றி 6 மீட்டர் காலி இடம் இருக்க வேண்டும் என்ற நிலையில் 1 அங்குலம் கூட காலி இடம் விடாமல் இதிலும் தீ விபத்தை தடுக்க முக்கியமாக மண்டபத்தின் இரண்டு பக்கமும் தண்ணீர் தொட்டி கட்டி இருக்க வேண்டும் என்ற விதியை மீறி தண்ணீர் தொட்டி இல்லாமல் செயல்படுவதோடு, பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தால் திருமண மண்டபத்திற்கு வரும் அனைத்து வாகனங்களும் தார்சாலையில் நிறுத்தப்படுவதால் வாகனம் செல்வதற்கும், பொதுமக்கள் நடப்பதற்கும் சிரமமாக உள்ளது என்பதை ஆணையருக்கு புகாரிலேயே சுட்டி காட்டியதோடு, ஸ்ரீ வாசவி மஹால் திருமண மண்டபம் போன்று விதி மீறி செயல்பட்டதால் தான் 2004 இல் திருச்சி ஸ்ரீ ரங்கம் திருமண மண்டபத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 64 பேர் மரணமடைந்த சூழ்நிலையை ஆணையருக்கு விளக்கியும் இதுவரை விதிமீறிய ஸ்ரீ வாசவி மஹால் திருமண மண்டபத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதில் இருந்து விதிமீறிய ஸ்ரீ வாசவி மஹால் திருமண மண்டபத்திற்கு உடந்தையாக செயல்படுகின்றார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாக நிரூபணமாகிறது.

எனவே மாண்புமிகு சத்தியத்தின் வழியில் கடமை புரியும் மதிப்புமிக்க தாங்கள் குற்றவாளியும், நீதிபதியும் ஒருவராக இருக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டு மேலான தங்களின் நேரடி பார்வையில் ஒரு குழு அமைத்து ஸ்ரீ வாசவி மஹால் திருமண மண்டபத்தை இட நேராய்வு செய்து மனுநீதிச் சோழன் போல் நீதி வழங்குமாறு தங்களை தாழ்மையுடன், பணிவுடன் கீழ்ப்படிந்து கேட்டுக் கொள்கிறேன்".

2) மனுதாரரது புகார் குறித்து துறையூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 17.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.1397/2025/எப்1, நாள் 03.07.2025 –ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"துறையூர் நகராட்சி பெரிய கடைவீதியில் கதவு எண்.194/286, (வார்டு C. பிளாக் 10, T.S.No.42 Old Survey No.388/74pt)ல் ஸ்ரீவாசவி திருமண மஹால் செயல்பட்டு வருகிறது.

தரைத்தளத்தில் மூன்று கடைகள் மற்றும் Marriage Hall-ம், முதல் தளத்தில் Dining Hall-ம் இரண்டாம் தளத்தில் 6 அறைகள் மற்றும் Toilets உள்ளது. தரைத்தளம், முதல்தளம் தலா 5566.0 சதுரடி பரப்பளவிலும், இரண்டாம் தளக்கட்டிடம் 1220.0 சதுரடி பரப்பளவிலும் கட்டப்பட்டுள்ளது. 1980, 1981–ம் ஆண்டுகளில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வருகிறது.

முன்பக்கம், பின்பக்கம் மற்றும் பக்கத் திறவிடங்கள் எதுவும் விடப்படவில்லை. வாகனம் நிறுத்துவதற்கென இடம் வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ள விவரம் எதுவும் இல்லை என நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டது. கட்டிடம் 1981–ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு 10.09.1981 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதற்கான கல்வெட்டின் புகைப்படம் நிர்வாகத்தால் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளது,

1. தமிழ்நாடு அடுக்குமாடி மற்றும் பொதுக்கட்டிட விதிகள் 1973–ன்படி அனைத்துப் பக்கங்களிலும் 4.0 மீ திறவிடம் விடப்படவில்லை.
2. பிரதான நுழைவு வாயில் 5.0 மீட்டருக்கும் குறைவாக 3.0 மீ மட்டுமே உள்ளது.
3. வாகன நிறுத்துமிடத்திற்கென 453.0 ச.மீ. இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

1981–ம் ஆண்டு கட்டப்பட்டுள்ள கட்டிடமாக இருந்தாலும், கட்டிட அனுமதி பெறப்பட்ட விவரம் எதுவும் இல்லாததால் மேற்படி கட்டுமானத்தினை அனுமதியற்ற கட்டுமானமாகக் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133(5), 135(1) ன் கீழ் அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி விதிப்பு எண்கள் 087/011/900642, 087/011/900641, 087/011/900643, 087/011/900644 ஆகிய எண்களில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு ஏதுமில்லை என்ற விவரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் ஸ்ரீவாசவி திருமண மஹால் உரிமையாளர் ஆகியோரை 17.07.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 10.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. S.அன்பழகன் என்பவர் 17.07.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6) துறையூர் நகராட்சியில் ஆணையராக பணிபுரிந்து வரும் திரு.ரா.வாசுதேவன் அவர்கள் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தனக்கு பதிலாக நகராட்சியில் மேலாளராக பணிபுரிந்து வரும் திருமதி.சி.அம்பிகா மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் மேற்படி விசாரணையில் ஆஜராவதற்கு அனுமதிக்குமாறு தனது கடிதம் ந.க.எண்.2867/சி1/2025, நாள் 16.07.2025–ல் கோரியுள்ளதை தொடர்ந்து, துறையூர் நகராட்சி மேலாளர் திருமதி. சி. அம்பிகா மற்றும் நகரமைப்பு ஆய்வாளராக பணியாற்றும் திருமதி. K.சந்திரா ஆகியோர் 17.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்பித்துள்ளனர்.

“மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள ஸ்ரீவாசவி மஹால் என்ற திருமண மண்டபம் துறையூர் நகராட்சி பெரிய கடை வீதியில், கதவு எண்.194/286, (வார்டு C, பிளாக் 10, T.S.No.42 Old Survey No.388/74)–ல் செயல்பட்டு வருகிறது. மேற்படி ஸ்ரீவாசவி மஹாலின் தரைத்தளத்தில் மூன்று கடைகள் மற்றும் திருமணக்கூடமும், முதல் தளத்தில் உணவருந்தும் கூடமும், இரண்டாம் தளத்தில் 6 அறைகள் மற்றும் கழிப்பறைகள் உள்ளது. தரைத்தளம், முதல் தளம் தலா 5566.0 சதுரடி பரப்பளவிலும், இரண்டாம் தளம் 1220.0 சதுரடி பரப்பளவிலும் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் 1980–1981ஆம் ஆண்டுகளில் ஸ்ரீ ஆரிய வைஸ்ய சமூக சேவிகா டிரஸ்ட்–ன் சார்பாக கட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்தது என்பதைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், இந்த கட்டிடத்தில் பார்க்கிங் வசதி இல்லை. கட்டிடத்தை சுற்றி நான்குபுறமும் போதிய திறவிடங்கள் (Set back) விடப்படவில்லை . தற்போது 480 அடி தூரத்தில் 4000 சதுர அடியில் வாகன நிறுத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த கட்டிடம் ஏதும் ஆக்கிரமிப்பில் உள்ளதா என்பது குறித்து வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது. வட்டாட்சியரின் அறிக்கை இதுநாள்வரை பெறப்படவில்லை எனத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், மேற்படி ஸ்ரீவாசவி மஹால் 1980–1981–ல் கட்டப்பட்டுள்ள கட்டிடமாக இருந்தாலும் கட்டிட அனுமதிபெற்ற விவரம் எதுவும் கட்டிட உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்படாததால் மேற்படி கட்டிடத்தை அனுமதியற்ற கட்டிடமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133 (5) மற்றும் 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு 02.07.2025 அன்று நகராட்சியால் அறிவிப்புவழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்”. என தெரிவித்துள்ளனர்.

7) இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீவாசவி திருமணமஹால் உரிமையாளரின் சார்பாக திரு. K. ரமேஷ், என்பவர் 17.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

“ஸ்ரீஆரிய வைஸ்ய சமூக சேவிகா டிரஸ்டில் நான் கடந்த 7 ஆண்டுகளாக மேலாளர் மற்றும் நிர்வாகியாக இருந்து வருகின்றேன். மேற்படி டிரஸ்ட் கடந்த 1938ஆம் ஆண்டு துவங்கப்பட்டு துறையூர் நகராட்சி, பெரிய கடை வீதி, கதவு எண்.194/286–ல் ஸ்ரீவாசவி திருமண மஹால் என்ற கட்டிடத்தினை 1981–ல் கட்டி அன்று முதல் பொதுப்பயன்பாட்டில் இருந்து வருகின்றது. மேற்படி கட்டிடத்திற்கு அப்போது இருந்த நிர்வாகிகள் கட்டிட அனுமதி பெற்று கட்டியதற்கான ஆதாரம் தற்போது எங்களிடம் இல்லை. எனவே, துறையூர் நகராட்சியினரால் எங்களது மேற்படி கட்டிடத்தை வரன்முறைப்படுத்த 02.07.2025 அன்று நோட்டீஸ் வழங்கினர். மேற்படி நோட்டீஸில் அறிவுறுத்தியவாறு மேற்படி கட்டிடத்தை வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கையினை மேற்கொள்கின்றேன் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.” என தெரிவித்துள்ளார்.

8) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி மேலாளரர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீவாசவி திருமண மஹால் உரிமையாளரின் சார்பில் ஆஜரான திரு.K.ரமேஷ் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

திருச்சி மாவட்டம் துறையூர் பெரிய கடைவீதியில் செயல்படும் ஸ்ரீவாசவி மஹால் திருமண மண்டபம் விதி மீறி கட்டப்பட்டு, 1 அங்குலம் கூட பார்க்கிங்கென்று இடம் விடாமல் பல வருடங்களாக செயல்பட்டு வருவதை துறையூர் நகராட்சி ஆணையருக்கு 18.03.2025 நாளிட்டு புகார் அனுப்பியும்,

தனது புகார் மீது நடவடிக்கை எடுக்குமாறு அரசு இணைச்செயலாளர் கடித எண்.1147/MA-1/2025-1 நாள்.26.03.2025ல் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உத்தரவு பிறப்பித்தும் துறையூர் நகராட்சி ஆணையர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

துறையூர் நகராட்சி பெரியகடை வீதியில் இயங்கி வரும் ஸ்ரீவாசவி மஹால் திருமண மண்டபத்தின் தரைத்தளத்தில் மூன்று கடைகள் மற்றும் Marriage Hall–ம், முதல் தளத்தில் Dining Hall–ம், இரண்டாம் தளத்தில் 6 அறைகள் மற்றும் Toilet உள்ளதும், தரைத்தளம், முதல் தளம் தலா 5566.0 சதுரடி பரப்பளவிலும், இரண்டாம் தளம் 1220.0 சதுரடி பரப்பளவிலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், 1980–1981–ம் ஆண்டுகளில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், முன்பக்கம், பின்பக்கம் மற்றும் பக்கதிறவிடங்கள் எதுவும் விடப்படவில்லை என்பதும், வாகனம் நிறுத்துவதற்கென இடம் கட்டட வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும், கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ள விவரம் எதுவும் இல்லை என்பதும், கட்டிடம் 1981ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு 10.09.1981 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதற்கான கல்வெட்டு உள்ளது என்பதும், 1981ம் ஆண்டு கட்டப்பட்டுள்ள கட்டிடமாக இருந்தாலும், கட்டிட அனுமதி பெறப்பட்ட விவரம் எதுவும் இல்லாததால், மேற்படி கட்டுமானத்தினை அனுமதியற்ற கட்டுமானமாகக் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133(5), 135(1)ன் கீழ் நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரமும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர், நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

ஸ்ரீவாசவி மஹால் என்ற கட்டிடத்தினை 1981–ல் கட்டி அன்று முதல் பொதுபயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதும், மேற்படி கட்டிடத்திற்கு அப்போது இருந்த நிர்வாகிகள் கட்டிட அனுமதி பெற்று கட்டியதற்கான ஆதாரம் தற்போது இல்லை என்பதும், துறையூர் நகராட்சியினரால் நோட்டீஸ் வழங்கப்பட்டு, மேற்படி நோட்டீஸில் அறிவுறுத்தியவாறு கட்டிடத்தை வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரான மேற்படி மஹால் உரிமையாளரின் சார்பில் ஆஜரான மேலாளரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

இந்நிலையில் ஸ்ரீவாசவி மஹால் கட்டிடம் 1980–1981ல் கட்டப்பட்டுள்ள கட்டிடமாக இருந்தாலும், கட்டிட அனுமதி பெற்ற விவரம் எதுவும் கட்டிட உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்படாத நிலையில், நகராட்சி ஆணையர் தனது அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர், நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133(5) மற்றும் 135(1)ன் கீழ் உரிய நடவடிக்கைகளை அனுமதியற்ற கட்டிடங்கள் குறித்த மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற்கொண்டு துரிதமமக மேற்கொள்ளுமாறு துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 06–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.அன்பழகன்,
155, அசோக் நகர், முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 010

2) நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) உரிமையாளர்,
ஸ்ரீ வாசவி மஹால்,
194/286, பெரிய கடை வீதி,
துறையூர் – 621 010.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032

செயலாளர்